

நாச்சந்தி நாரதி

"நாறல் மீனத்தேடி பூனை சுத்துறமாதிரி உவையளும் வாக்குத்தேடித்தான் வருகினம் பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 202

சனிக்கிழமை
15 ஜூன் 2024

ஆனி 1
வள்ளுவர் ஆண்டு 2055


ஐ.தே.க. → ஐ.ம.ச. → ஜே.வி.பி. → பெரமுன



# தெற்குக் கட்சிகள் வடக்கில் முகாம்!

யாழ்ப்பாணம், ஜூன் 15

இலங்கையின் பிரதான தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய வற்றின் முக்கியஸ்தர்கள் ஒரே வாரத்தில் வடமாகாணத் தில் முகாமிட்டுள்ளனர். 11

## வடக்கு மக்களின் ஆதரவு ரணிலுக்காம்!

*ஐ.தே.க. பொதுச்செயலாளர் கண்டுபிடிப்பு*


கொழும்பு, ஜூன் 15

வடக்கு - கிழக்கு மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் வென்றவர் ரணில் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித் துள்ளார். 11

## 'ஸ்மார்ட்' யாழ்ப்பாணம்; நடவடிக்கை மும்முரம்!

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணத்தை 'ஸ்மார்ட்' நகரமாக்குவது தொடர்பில் வட மாகாண ஆளுநருடன், உலக சுகாதார ஸ்தாபன அதிகாரி கள் நேற்றுக் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளனர். வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தின் கேட் போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம் 11



இரு வாகனங்களில் கடத்தப்பட்ட

## 40 இலட்சம் பெறுமதியான ஆடுகள், மாடுகள் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடக்கில் இருந்து புத்தளம் மற்றும் கொழும்பு நோக்கி இரு வாகனங்களில் கடத்தப்பட்ட 70 ஆடுகள் மற்றும் 18 மாடுகள் ஓமந்தைப் பகுதி யில் வைத்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. அவை 40 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெறுமதி யுடையவை என்று தெரிவிக்கப்பட் டுள்ளது. 11

## யாழில் டெங்கு ஆபத்து!

கொழும்பு, ஜூன் 15

இலங்கையில் டெங்குத் தொற்று தீவிரப்பரவல் அடைந்துள்ள மாவட்டங்களில் ஒன்றாக யாழ்ப் பாணமும் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது.

இலங்கையில் தற்போது டெங் குத் தொற்று தீவிரம் பெற்றுள்ள நிலையில், அதியுச்ச ஆபத்து நிறைந்த மாவட்டங்களாக ஏழு மாவட்டங்களை சுகாதாரத் திணைக்களம் அடை யாளப்படுத்தியுள்ளது. 11

## சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 15

வேலணை மடத்துவெளி கடற்கரையில் ஆணின் சடல 11

## பல்கலைப் பணியாளர்களை பணிக்குத் திரும்ப உத்தரவு

போராட்டத்தை தீவிரப்படுத்த பணியாளர்களும் விடாப்பிடி

கொழும்பு, ஜூன் 15

தொடர்ச்சியான தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடு பட்டுவரும் அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாராப் பணியாளர் களையும் எதிர்வரும் 18 ஆம் திகதிமுதல் பணிக் குத் திரும்புமாறு உத்தரவி டப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்துள்ள அவர் கள், தங் களின் போராட்டத்தை 11

## ஒரு மில்லியன் டொலருடன் மூவர் கிளிநொச்சியில் கைது

கிளிநொச்சி, ஜூன் 15

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக ஒரு மில்லியன் டொல ருடன் மூன்று பேர் நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டுள்ள னர். ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் நாணயத்தாள் மற் 11



## இலங்கை வான்படைக்கு அமெரிக்க ஆயுதங்கள்!

கொழும்பு, ஜூன் 15

இலங்கை வான்படைக்கு 1.6 மில்லி யன் டொலர் பெறுமதியான ஆயுதங் கள் அமெரிக்காவால் அன்பளிப் பாக வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆயுதங்கள் கட்டு 11

## போதையற்ற நாடாக 2025 இல் இலங்கை!

*பொலிஸ்மா அதிபர் நம்பிக்கை*

கொழும்பு, ஜூன் 15

2025ஆம் ஆண்டு போதையற்ற இலங்கை உருவாக்கப்படும் என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-


2023ஆம் ஆண்டு டிசெம்பர் 11





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணசிங்க பிரேமதாஸ '13'ஐ ஆதரித்தாரா?



## சஜித் தெளிவுபடுத்தவேண்டும் கோருகிறது பெரமுன

**கொழும்பு, ஜூன் 15**

**அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை ரணசிங்க பிரேமதாஸ ஆதரித்தாரா என்பது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெளிவுபடுத்தவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் தேசிய ஏற்பாட்டாளர் ரோஹித அபேகுணவர்த்தன.**

'காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பில் சஜித் பிரேமதாஸவின் நிலைப்பாடு என்ன? பொலிஸ் அதிகாரத்தை வழங்கினால் மாகாணங்களிலும் பொலிஸ்மா அதிபர்கள் செயற்படக்கூடும்.

நாட்டு மக்கள் தற்போது போரின்றி வாழ்கின்றனர். எனவே, மஹிந்தவும், படையினரும் பாதுகாத்த நாட்டைக் காட்டிக்கொடுக்க வேண்டாம் - எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஒ-44)

## சட்டவிரோத மீன்பிடி; கடற்படை ஆதரவா?

யாழ்ப்பாணம், ஜூன் 15

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான கடற்பகுதியில் கடலட்டைகள், மீன்கள் என்பவற்றை ஒளிபாய்ச்சி சட்டவிரோதமாகப் பிடிக்கும் செயல்கள் தீவிரமாகியுள்ளதால் தமது தொழில் நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதாக சிறுதொழிலாளர்கள் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைச் செய்துவருகின்றனர். சட்டவிரோத கடற்றொழிலாளருக்குக் கடற்படையினர் ஆதரவாகச் செயற்படுவதாகவும் அவர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

கட்டைக்காட்டில் இருந்து படகுகளில் சென்று ஒளிபாய்ச்சி மீன்களைப் பிடித்து வந்த மீனவர்கள் 16 பேர், அவர்கள் பயன்படுத்திய 8 படகுகளுடன் வெற்றிலைக்கேணி கடற்படையினரால் கடந்த புதன்கிழமை கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ். கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டனர். கைதுசெய்யப்பட்டவர்களுள் சிலரைக் கடற்படையினர் கடலில் வைத்து விடுவித்துள்ளதாக நேரில் பார்த்த சிறுதொழிலாளர்கள் குற்றஞ்சாட்டியுள்ளதுடன், விடுதலை செய்யப்பட்டவர்கள் துணிவாக சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுவதாகவும் தெரிவிக்கின்றனர். (ஒ- 25-27)

## பாற்குடப் பவனி

கொழும்பு, ஜூன் 15

வெள்ளவத்தையில் அமைந்துள்ள ஸ்ரீ வீரமகா கண்ணகி அம்மன் கோவில் பாற்குடப் பவனி, ஜூலை மாதம் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.30 மணிக்கு பம்பலப்பிட்டி வஜீரா பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி வெள்ளவத்தை ஸ்ரீ வீரமகா கண்ணகி அம்மன் ஆலயத்தில் நிறைவடையவுள்ளது.

பாற்குடப் பவனியில் பங்கேற்று பாற்குடம் எடுக்க விரும்பும் அடியார்கள், கோவிலில் முன்கூட்டியே பெயர்களைப் பதிவுசெய்யவேண்டும். பெயர்களைப் பதிவு செய்யும் கண்ணகி அம்மன் மெய்யடியார்களுக்கு ஜூலை 20 ஆம் திகதி அதிகாலை 5.30 மணியிலிருந்து பம்பலப்பிட்டி வஜீரா பிள்ளையார் ஆலயத்தில் வைத்து, பால் மற்றும் இலக்கம் வழங்கப்படும். அவ்விலக்கத்தின்படியே கண்ணகி அம்மனுக்குப் பால் வார்க்கலாம் எனவும் பாற்குடப் பவனிக்கான பால், கோவிலால் இலவசமாக வழங்கப்படும் எனவும் கண்ணகி அம்மன் ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது. (ப-100)

## கட்டடத் திறப்பு விழா!

யாழ்ப்பாணம், ஜூன் 15

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை வளாகத்தில் புதிய கட்டடத் தொகுதி திறப்புவிழா நிகழ்வு, நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் நவரத்தினராசா ஜெயரூபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் கணிதப் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா, வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கனகசபை சத்தியசீலன், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இரத்தினம் தமிழ்மாறன், வவுனியா தெற்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி தாட்ஷாயினி வஜிகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், மத்திய கட்டடத் திணைக்களத்தின் பிரதிப் பிரதம பொறியியலாளர் வ.அரவிந்தன் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ப-100)

## டெங்கு பரவும் சூழல் மூவருக்குத் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

டெங்கு நுளம்பு பரவும் சூழலை வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் 4 ஆயிரத்து 500 ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

இணுவில் மற்றும் தாவடிப் பகுதிகளில் கடந்த 8 ஆம் திகதி இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட தொடர் டெங்கு களத்தரிசிப்பின்போது டெங்குக் குடம்பிகள் கண்டறியப்பட்ட இடங்கள் தொடர்பாக மூவருக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மூவரும் தம் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதையடுத்து மூவரையும் எச்சரித்த நீதிவான் 4 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்தும் உத்தரவிட்டார். (ஒ-66)

## கலந்துரையாடல்





கிளிநொச்சி, ஜூன் 15

வங்கி மற்றும் நிதி நிறுவனங்களை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியின் மாநாடு ஒன்று, கிளிநொச்சியிலுள்ள தனியார் மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில், வங்கி மற்றும் நிதி நிறுவன ஊழியர்கள், சுனில் ஹந்துநெத்தி, சந்திரசேகரன், சமீர அல்விஸ் உள்ளிட்ட மக்கள் விடுதலை முன்னணியின் முக்கி [illegible] கலந்து கொண்டனர். (ப-113)

## நடைபயணம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

பருத்தித்துறை தொடக்கம் மாதகல்வரை கடற்கரை வீதியூடாக திட்டமிடப்பட்டுள்ள நடைபயணம் நாளை ஞாயிற்றுக் கிழமை பருத்தித்துறை முனையில் இருந்து ஆரம்பமாக உள்ளது. நடைபயணமானது பருத்தித்துறை துறைமுகம் ஊடாக வடமராட்சி கடற்கரை வீதி வழியே பயணித்து தொண்டைமானாறு ஊடாக மயிலிட்டி காங்கேசன்துறை மாவிட்டபுரம் கீரிமலை சென்று அன்றைய தினம் மாலை மாதகலை சென்றடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-100)

## உணவுக் கண்காட்சி






யாழ்ப்பாணம், ஜூன் 15

தேசிய போஷாக்கு மாதத்தை முன்னிட்டு 'போஷாக்கான உணவும் நஞ்சற்ற உணவும்' எனும் தொனிப் பொருளிலான கண்காட்சி, கண்டாவளை சுகாதார மருத்துவப் பணிமனையின் சுகாதார மருத்துவ அதிகாரி துவாரகாவின் ஏற்பாட்டில் கண்டாவளைப் பிரதேச செயலாளர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட சுகாதார மருத்துவ அதிகாரி வினோதன், கண்டாவளை பதில் பிரதேச செயலாளர், தருமபுர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, மதகுருமார், வர்த்தகர்கள், கிராம அலுவலர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-25-113)

## ஐ.எம்.எப். கொடுக்கல் வாங்கல் ஜனநாயகமற்ற முறையில் நடைமுறை

கொழும்பு, ஜூன் 15

சர்வதேச நாணயநிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்களை ஜனநாயகமற்ற வழிகளில் நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணயநிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடனுக்கு வட்டி செலுத்துவதை ஏற்றுக்கொள்ளமுடியாது. இது நாட்டை மேலும் அபாயகரமான நிலைக்குத்தள்ளிவிடும்- என்றார். (ஒ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போலி வாக்குறுதிகளால் மக்களை ஏமாற்றாதீர்கள்

## எதிர்க்கட்சியினருக்கு செஹான் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூன் 15**

**பொருளாதாரத்தின் மீது சர்வதேசமும், நாட்டு மக்களும் நம்பிக்கை கொண்டுள்ள நிலையில், உறுதிப்பாட்டை பலவீனப் படுத்தும் வகையில் பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை எதிர்த் தரப்பினர் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.**

-இவ்வாறு நிதி அமைச்சின் காரியாலயத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சர்வதேச நாணய நிதியத்துடன் இலங்கை முன்னெடுத்துள்ள செயற்றிட்டம் வெற்றிகரமான நிலையில் காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து எவ்வாறு மீட்சிபெறவேண்டும் என்பதற்கான வழிமுறைகளை நாணய நிதியமே காண்பித்தது. ஒவ்வொரு தவணைக்கும் புதிதாக நிபந்தனைகள் வகுக்கப்படுவதில்லை. சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான செயற்றிட்டம் குறித்து, நாடாளுமன்றத்தில் மூன்று நாள்கள் விவாதம் இடம்பெற்றது, இதன்போது பல விடயங்கள் ஆராயப்பட்டன.

கடன் சமநிலை மற்றும் வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட காரணிகளை முன்னிலைப்படுத்தி சர்வதேச நாணய நிதியத்துடனான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. வெகுவிரைவில் வெளிநாட்டு அரசமுறை கடன் மறுசீரமைக்கப்படும் - என்றார். (ச-இ)

# சவால்களை எதிர்கொள்வதற்கு தொழில் மேம்பாட்டு அமைப்பு

கொழும்பு, ஜூன் 15

உள்நாட்டில் நிறுவப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்ய நாடு முழுவதும் 25 மாவட்ட தொழில் மேம்பாட்டு அமைப்புகளை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பலதுறை மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் உள்ளூர் மட்டத்தில் தரமான மற்றும் திறமையான சேவைகள் வழங்கப்படுவதை உறுதி செய்வதே இதன் இலக்காகும் என்று கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரண தெரிவித்தார். (ச-இ)

# பல்கலை அனுமதிக்கு விண்ணப்பம் கோரல்


கொழும்பு, ஜூன் 15

2023, 2024 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு இணையம் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை www.ugc.ac.lk என்ற இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும்.

எதிர்வரும் ஜூலை மாதம் 5 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (ச-66)

# யாழில் பலத்த காற்று இரண்டு வீடுகள் சேதம்



யாழ்ப்பாணம், ஜூன் 15

கடந்த சில தினங்களாக வீசிய அதிக காற்றுக் காரணமாக யாழ். மாவட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவில் ஜே/227 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட வீடும், பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் பிரிவில் ஜே/399 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட வீடொன்றும் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவத்தில் ஏழு பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்.மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தகவல்கள் தெரிவித்துள்ளன. (ப-66)

# கிராம அலுவலருக்கு புதிய சேவையாப்பு

கொழும்பு, ஜூன் 15

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர் கிராம உத்தியோகத்தர்களின் புதிய சேவை யாப்பு அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக்க பிரியந்த தெரிவித்துள்ளார். அவசியம் ஏற்படுமாயின் இந்தப் புதிய யாப்பில் திருத்தங்களைச் செய்வதற்கும் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# நலன்புரித் திட்டத்தின் பயன் மக்களைச் சேரவேண்டும்



## ஆளுநர்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரித் திட்டங்களை வினைத்திறனுள்ளதாக்கி அதன் பயன்களை மக்களுக்கு துரிதமாக வழங்குவதற்கு ஆளுநர்கள் பங்களிக்கவேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாகாண ஆளுநர்களுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உறுமய காணி உறுதிகளை வழங்கும் வேலைத் திட்டத்தை வினைத்திறன்மிக்கதாக மாற்றுவதற்கு கிராம உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக மற்றுமொரு குழுவுக்கு அதிகாரத்தை வழங்கி நடமாடும் சேவைகளை நடைமுறைப்படுத்தும் சாத்தியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்காக ஜனாதிபதி நிதியத்தின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்தை துரிதப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தினம் தெரியுமோ?

**போட்டி** இருக்கலாம், பொறாமை இருக்கக் கூடாது எண்டு பழைய ஆக்கள் சொன்னதை எங்கட அரசியல்வாதிமார் பிழையா விளங்கிட்டினம் போல. அதால எல்லா இடத்திலையும், எல்லாத்துக்கும் அவையள் போட்டிபோடத்தொடங்கியிருக்கினம். சனத்துக்கு நல்லது செய்யிறதில 'நான் முந்தி, நீ முந்தி' எண்டு இவையள் போட்டி போட்டிருந்தால் அதைக் கொண்டாடியிருக்கலாம். ஆனால், எங்கட அரசியல்வாதியள் மேலிடங்களுக்கு ஆர் பல்லக்குத் தூக்கிறது, ஆர் காவடி எடுக்கிறது, ஆர் நிலப்பாவாடை விரிக்கிறது எண்டெல்லோ போட்டி போடுகினம்.

மன்னாருக்கு இலங்கையின்ர மன்னர் ரணிலார் வாறாரெல்லோ. அவரை வரவேற்கிறதுக்கும், ஆளுக்கு ஐஸ் வைச்சு புகழுறதுக்கும்,இடங்களைச் சுத்திக்காட்டுறதுக்கும் தடல்புடலான ஏற்பாடுகள் நடக்குதாம். முதல்ல இந்த ஏற்பாடுகளில அங்கத்தை ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரா இருக்கிற மஸ்தான் தான் இறங்கினவர். ஆனால் திடீரெண்டு எங் கையோ இருந்து வந்து குதிச்சிருக்கிறார் செல்வமான எம்.பி.யார். மஸ்தான் எம்.பி. ரணிலோட கடும் ஐக்கியம். அதாலதானே அவருக்கு ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் பதவியே கிடைச்சது. ஆனால் செல்வமானவர் அப்பிடி இல்லை. இத்தனைக்கும் ரணிலுக்கே கெடிக்கலக்கத்தை வரவைச்சிருக்கிற பொது வேட்பாளர் விசயத்தை ஆதரிக்கிறன் எண்டு உந்தச் செல்வமான எம்.பி.யார் அறிக்கையெல்லாம் விட்ட சூடுகூட இன்னும் மாறேலை. அதுக்குள்ள இப்பிடி ஒரு அந்தர்பல்டி அடிச்சு, வேர்த்து விறுவிறுக்க ரணிலாரை குஷிப்படுத்தோணும் எண்டு மன்னாரில மாடா உழைச்சு, ஓடாத் தேயுறாராம். இப்பிடி செல்வமானவர் ரணிலாரின்ர கடைக்கண் பார்வைக்காக கடும் ஏற்பாடுகள் செய்யிறது மஸ்தானுக்கு பிடிக்கேலையாம். இதால ரண்டு பகுதியும் இப்ப முறுகுப்பட்டுக் கொண்டு திரியினமாம்.

இந்த முறுகல் இப்ப கூட்டத்துக்கு ஆக்களைக் கொண்டாறதில இன்னும் உச்சமாகிட்டுதாம். ரணிலார் போற இடமெல்லாம் சனக்கூட்டம் அலைமோதோணும் எண்டு மஸ்தான் ஆக்களை செற் பண்ணி இருக்கிறார். ஆனால் இப்ப என்னெண்டால் அதே ஆக்களை செல்வமானவர் தன்ர பக்கம் இழுத்து, தான் கூட்டிக் கொண்டந்தமாதிரிக் காட்டுறதுக்கு அலுவல் பாத்திட்டாராம். இந்த விசயம் கேள்விப்பட்டதில இருந்து மஸ்தானுக்கு இருப்புக்கொள்ளேலையாம். தன்னைவிட செல்வமான எம்.பி.யார் ரணிலிட்ட நல்லபேர் எடுக்கப்போறாரே எண்டு ஆளுக்கு கடும் பதற்றமாம். அதால மன்னாரையும் தாண்டி, வவுனியா, கிளிநொச்சியில இருந்தும் தன்ர பங்குக்கு ஆக்களை பஸ்ஸை விட்டு ஏத்திற ஏற்பாடுகளை மஸ்தான் ரகசியமாச் செய்யிறாராம். எது எப்பிடியோ இவையின்ர ஏட்டிக்குப் போட்டியால ரணில் மன்னாரில கால் வைக்கிற இடமெல்லாம் சனம் கடல் மாதிரி நிக்கப் போகுதுகள், அந்தாளும் இவ்வளவு சனம் தனக்குச் சப்போர்ட் எண்டு நம்பி ஏமாறப்போகுது. ஐஸ் வைக்கிறதுக்கும் ஒரு அளவிருக்குத்தானே. ரணிலுக்கு செய்யிற கவனிப்பைக் கொஞ்சம் சனத்துக்கும் செய்தா என்னவாம்? அதுக்கு மட்டும் இவைக்கு நேரமிருக்காதே.



-பட்சி

padsi@uthayan.com

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடிவரும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். எதிர் பாராத ஆதாயம் கிடைக்கும். அனுகூலம் உண்டாகும். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனமாக இருக்கவும். உற வினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படக் கூடும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். பணியாளர்களால் பிரச்சினை ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உடல்நலனில் கவனம் தேவை. எதிர் பாராத செலவுகள் ஏற்படக்கூடும். ஒருவரை யொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. சக வியாபாரிகளால் பிரச்சினை ஏற்படும். மகா விஷ்ணு வழிபாடு நன்மை தரும்.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். ஆதாயம் உண்டாகும். மனதில் தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். சக வியாபாரிகள் மூலம் ஆதாயம் பெறும் வாய்ப்பு உண்டு. காரியங்களில் வெற்றி ஏற்படும்.

**சிம்மம்:** தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம். தட்சிணாமூர்த்தி வழிபாடு தடைகளைத் தகர்க்கும்.

**கன்னி:** எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர் களுடன் அனுசரித்துச் செல்லவும். பொறுமை அவசியம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வும்.

**துலாம்:** உற்சாகமாகச் செயற்படுவீர்கள். குடும் பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சகோதர வகையில் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**விருச்சிகம்:** அனுகூலமான நாள். குடும்பத் தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். எதிர்பாராத ஆதாயம் ஏற்படும். பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. சலுகை கிடைக்கும்.

**தனுசு:** அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். திடீர்ப் பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் பணியாளர்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்கவும். உடல் ஆரோக்கியம் பேணவும்.

**மகரம்:** எதிலும் அவசரமில்லாமல் செயற் படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்ப டக்கூடும். பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் சில பிரச்சினைகள் ஏற்படும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரையும்.

**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். செலவு செய்யவேண்டி இருக்கும் பொறு மையைக் கடைப்பிடிப்பது நல்லது. வியாபாரத்தில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். வைரவரை வழிபடுவதன் மூலம் மனத் தெளிவு பெறலாம்.

**மீனம்:** வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற் படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்குப் பக்கபலமாக இருப்பார். பணவரவுக்கு வாய்ப்புண்டு.



### யாழ்.பல்கலை துணைவேந்தர், பேராசிரியர்களுடன்

# வேலூர் தொழில்நுட்பக் கல்லூரியின் துணைவேந்தர் விஷ்வாகாந்த் சந்திப்பு

## யாழ். மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் வழங்குவது தொடர்பிலும் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 15

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு நேற்று வெள்ளிக்கிழமை வருகைதந்த இந்தியாவின் வேலூர் தொழில்நுட்பக் கல்லூரி துணைவேந் தர் ஜி.விஷ்வாகாந்த் தலைமையிலான குழுவி னர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணை வேந்தர் மற்றும் பேராசிரியர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

கல்வி ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பாக சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதுடன் வேலூர் தொழில்நுட்பக் கல்லூரியில் இலங்கை மாணவர்களுக்கு புலமைப்பரி சில் களையும், குறுங்கால புலமைப்பரிசில் களையும் வழங்குவது தொடர்பிலும் ஆலோ சிக்கப்பட்டது.

மேலும் இரு பல்கலைக்கழகங்களும் இணைந்து விரைவில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடவும் தீர்மானித்தன.

இந்தச் சந்திப்பில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஸ்ரீசற்குணராசா, கலைப்பீடாதிபதி ரகுராம்,விஞ்ஞான பீடாதிபதி ரவிராஜன், வர்த்தக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி கெங்காதரன், பட்டப்பின் படிப்பு கற்கை கள் பீடாதிபதி வேல்நம்பி, சிரேஷ்ட பேராசிரியர் ஜி.மிகுந்தன், விவசாய மற்றும் தொழில்நுட்ப பொறியியல் பீடங்களின் பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள் ஆகியோருடன் வேலூர் தொழில் நுட்பக் கல்லூரி துணைவேந்தர் ஜி.விஷ்வா காந்த்,சர்வதேச கற்கைகளுக்கான பணிப்பாளர் பேராசிரியர் ஸ்ரீனிவாசன், இலங்கை இணைப் பாளர் முயீன், துணை வேந்தரின் செயலர் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். (ச-6)

## பங்களாதேஷிடம் வீழ்ந்தது நெதர்லாந்து

ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் 27 ஆவது ஆட் டத்தில் நெதர்லாந்தை 25 ஓட்டங்களால் வெற்றி கொண்டது பங்களாதேஷ் அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நெதர்லாந்து அணி முதலில் களத் தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

160 என்ற வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத் தாடிய நெதர்லாந்து அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் முடிவில் 8 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பங்களாதேஷ் அணி 25 ஓட்டங் களால் வெற்றிபெற்றது. (எ)

## இங்கிலாந்திடம் வீழ்ந்தது ஓமான்!

ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் 28 ஆவது ஆட்டத்தில் இங்கிலாந்து அணி ஓமான் அணியை 8 விக்கெட்டுகளால் வெற் றிகொண்டது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமான் அணி 13.2 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 47 ஓட்டங் களை மட்டுமே பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 3.1 பந்துப் பரிமாற்றங்களில் 2 விக் கெட்டுகளை இழந்து 50 ஓட்டங்களைப் பெற்று இலகுவாக வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. (எ)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

சாவகச்சேரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வரு டாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு சாவகச்சேரி டச்சு வீதியி லுள்ள ஐங்கரன் மணி மண்டபத்தில் பிரதேச கிராம அபிவி ருத்தி அலுவலர் லலிதகுமார் தலைமையில் நடைபெறவுள் ளன. சங்கத்தின் அங்கத்தவர்கள் அனைவரையும் பங்கு பற்றுமாறு சங்கத் தலைவி திருமதி ம.கீர்த்திநாதன் அறி வித்துள்ளார். (ச-9)

## உழவியந்திரத்துக்குள் சிக்கி 8 வயதுச் சிறுமி உயிரிழப்பு!

மன்னார், ஜூன் 15

பேரனார் செலுத்திய உழவு இயந்திரத்தில் சிக்கி 8 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை மன்னார், பூவரசங்குளத்தில் நடந்துள்ளது.

வயலில் உழுதுகொண்டிருந்தபோது உழவியந்திரத்தின் மேற் பகுதியில் (மட்காட்) அமர்ந்திருந்த சிறுமி தவறிக் கீழே வீழ்ந்து உழவியந்திரத்துக்குள் சிக்கியுள்ளார்.

சிறுமியின் உடல் மன்னார் பொது மருத்துவமனையில் ஒப்படைக் கப்பட்டுள்ள நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முருங்கன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.(எ-56)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வலிந்து ஏற்படுத்தப்படும் வாழ்விட மோதல்கள்!

இலங்கையில், வாழ்விட மோதல்கள் காரணமாக, கடந்த ஐந்து மாதங்களில் 150க்கும் மேற்பட்ட யானைகள் கொல்லப்பட்டிருக்கின்றன என்று வன உயிரிகள் திணைக்களம் அறிக்கையிட்டிருக்கின்றது. கடந்த ஆண்டு 488 யானைகள் வாழ்விட மோதல்களால் கொல்லப்பட்ட நிலையில், இந்த வருடமும் அந்தத் துயர்கதை நீண்டு செல்வதை அவதானிக்க முடிகின்றது. துப்பாக்கிச்சூடு நடத்தியும், வெங்காய வெடிவைத்தும் கொல்லப்படுதல், மின்வேலிகள் மற்றும் புதைகுழிகளில் அகப்பட்டு இறத்தல், ரயில் மோதல்களில் பலியாதல் எனப் பலவகையான துர்மரணங்களை இந்த யானைகள் சந்தித்திருக்கின்றன.

இலங்கையில் விவசாயிகளுக்கும் வனவிலங்குகளுக்கும் இடையிலான வாழிட மோதல் இன்று நேற்று நடப்பதல்ல. நீண்டதும் நெடியதுமான தொடர்கதை இது. கடந்த பலவருடங்களாகவே வனவிலங்குகளால் குறிப்பாக யானைகள் மற்றும் குரங்குகளால் ஏற்படும் பயிரழிவுகள் மற்றும் விவசாய அழிவுகள் தொடர்பில் விவசாயிகள் தொடர்ச்சியாக முறையிட்டுக் கொண்டுதான் உள்ளனர். உச்சப் பாதிப்பாக, விவசாயத்தைக்கைவிட்ட விவசாயிகளும், வாழ்வாதாரத்தை இழந்த குடும்பங்களும் இலங்கையில் ஏராளம். ஆனால், இந்த 'மனித – விலங்கு' வாழ்விட மோதல் ஏன் ஏற்படுகின்றது? எதற்காக யானைகளும், குரங்குகளும் இதர வன விலங்குகளும் மனித வாழ்விடங்களுக்குள்ளும், விவசாய நிலங்களுக்குள்ளும் ஊடுருவுகின்றன என்ற கேள்விகளை நியாயமான அடிப்படையில் பரிசீலனை செய்வதற்கோ அதற்கொரு தீர்வை வழங்குவதற்கோ அரசாங்கம் தயாரில்லை.

உண்மையில் விலங்குகள் மனிதர்களுடைய வாழ்விடங்களுக்குள் வரவில்லை. மனிதர்களாகிய நாம்தான் விலங்குகளின் வாழ்விடங்களுக்குள் எதேச்சதிகாரமாக அத்துமீறியிருக்கின்றோம். கடந்த பத்து வருடங்களுக்கு முன்பிருந்த வனாந்தரங்கள் இன்றில்லை. தமிழர் தாயகமாக இருந்தாலும் சரி அல்லது 'ஒரு நாடு என்ற ரீதியில்' இலங்கையாக இருந்தாலும் சரி எங்கும் கட்டடக் கானகங்கள்தான் இப்போது எஞ்சி நிற்கின்றன. காலாகாலமாக விவசாயப் பகுதிகளாக இருந்த நிலங்களை இப்போது கட்டடங்கள் ஆக்கிர மித்திருக்க, விவசாய நிலங்கள் வனாந்தரங்களில் புதிதாக உருவாக்கப்படுகின்றன. காடுகளை ஊட றுத்து ரயில் தண்டவாளங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மனிதர்களின் இந்தச் செயற்பாட்டால் உணவுப்போட்டியும் உறைவிடப்போட்டியும் விலங்குகளிடத்தில் வலிந்து ஏற்படுத்தப்படுகின்றது. தமக்கான உணவு மூலங்கள் அழிக்கப்பட்ட நிலையில், உறைவிடங்கள் இழக்கப்பட்ட நிலையில், இதன் தொடர்ச்சியாகத்தான் உணவைத் தேடியும், உறைவிடங்களைத் தேடியும் விலங்குகள் மனித வாழ்விடங்களுக்குள்ளும் -விவசாய நிலங்களுக்குள்ளும் ஊடுருவுகின்றனவே அன்றி இதில் யானைகளின் தவறென்று என்னதான் உள்ளது?

இலங்கையில் அதியுச்ச வேகம்பெற்றுவரும் 'மனித விலங்கு' வாழிட மோதல்களைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் அல்லது தவிர்க்கவேண்டுமாயின் வனாந்தரங்களின் இருப்பு முதலில் உறுதி செய்யப்பட வேண்டும். காடுகளின் இருப்பும் - அளவும் குறுகக் குறுக விலங்குகள் காடுகளைவிட்டு வெளியில் செல்லும் என்பது இயற்கை நியதி, யதார்த்தமும் அதுவே. அவற்றின் உலகை நாள்தோறும் நாம் ஆக்கிரமித்துக் கொண்டால், அவையும் பாவம் எங்குதான் செல்லும்...?






# கத்தி முனையிலேயே கடன் மறுசீரமைப்பு!

சர்வதேச நாணய நிதியம் தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 15**

**கடன் மறுசீரமைப்பு செயல்முறையை முன்கொண்டு செல்வதற்குப் போதுமான முன்னேற்றம் இலங்கையிடம் இருக்கின்றது. ஆயினும் கடன் மறுசீரமைப்பானது கத்திமுனையிலேயே இருக்கின்றது.**

என்று சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியில் நேற்றுக்காலை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் சர்வதேச நாணயநிதியத்தின் இலங்கைக்கான திட்டத்தின் பணிப்பாளர் பீற்றர் ப்ரூவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரம் இன்னமும் பாதிப்படையக்கூடிய நிலையிலேயே உள்ளது. கடன் மறுசீரமைப்பானது கத்தி முனையில் நடப்பதைப் போன்று இருக்கின்றது.

கடன் மறுசீரமைப்பு வேகத்தைத் தொடர்ந்தும் தக்கவைக்க வேண்டியது அவசியமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# வாகன இறக்குமதிக்குத் தடை மிக விரைவில் முடிவுக்கு

வாகன இறக்குமதிக் கட்டுப்பாடுகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான திட்டத்தை, இன்று இலங்கை இறுதி செய்யும் என்று சர்வதேச நாணயநிதியம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டின் 3ஆம் காலாண்டுக்குள் பொதுப்போக்குவரத்து மற்றும் விசேட நோக்கங்களுக்கான வாகனங்களின் இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் 4ஆம் காலாண்டுக்குள் சரக்குப் போக்குவரத்துக்கான வாகனங்களை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. 2025ஆம் ஆண்டில் அனைத்துவித வாகனங்களுக்குமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்று சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு கொடுப்பனவு அதிகரிப்பு

நெடுஞ்சாலை போக்குவரத்துக் கடமையில் ஈடுபட்டுள்ள போக்குவரத்துத் திணைக்கள பொலிஸ் அதிகாரிகளுக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான புதிய சுற்றறிக்கை பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனால் வெளியிடப்பட்டுள்ளது. (எ–இ)

# 150 யானைகள் 5 மாதங்களில் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 15

கடந்த 5 மாதங்களில் 150 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன. உயிரிழந்த யானைகளில் பெரும்பாலானவை இளம் வயதுடையவை என்று தெரிவிக்கப்படுகின்றது.

மனிதர்களுக்கும், யானைகளுக்கும் இடையே அதிகரிக்கும் முரண்பாடுகளால் இவை உயிரிழந்துள்ளன.

அதேவேளை, யானைகள் - மனிதர்கள் முரண்பாட்டால் இந்த ஆண்டு 45 பேர் உயிரிழந்துள்ளனர். (எ-இ)

# தேர்தல் நடத்துவதில் சிக்கல் ஏதுமில்லை!

ஐ.எம்.எப். தெரிவிப்பு

இலங்கையில் தேர்தல் நடத்தப்படுவதில் சர்வதேச நாணய நிதியத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை என்று சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான திட்டத்தின் பணிப்பாளர் பீற்றர் ப்ரூவர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்றுக் காலை நடத்தப்பட்ட ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அனைத்து நாடுகளினதும் ஜனநாயகத்தை சர்வதேச நாணய நிதியம் மதிக்கின்றது. இலங்கையில் தேர்தல் நடத்தப்பட்டால் அது சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டத்தின் நேரத்தை பாதிக்கும். உரிய அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து புதிய கால அட்டவணையை தயாரிக்கவேண்டும் - என்றார். (எ-இ)

## நாளை

16.06.2024

**ஞாயிற்றுக்கிழமை**

**ஆனி - 02**

சுபநேரம் : 08.53 - 10.23

ராகுகாலம் : 04.23 -05.53

## நாளொரு நல்வார்த்தை

**சாதி என்னும் காழ்ப்புணர்வினால் பெரும்பாலான மக்கள் மனிதத்தன்மையற்று வாழ்கின்றனர்.**

**- டாக்டர் அம்பேத்கர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளராக களமிறங்குவதற்குத் தயார்!

## அனந்தி சசிதரன் அறிவிப்பு!

இன அழிப்புக்கான சர்வதேச நீதிக்காக அஞ்சாநெஞ்சத் துணிவும், தகைமையும், வன்மையும் பொருந்திய ஒருவராக பொதுவேட்பாளராகப் போட்டியிடுவதற்குத் தயார் என்று ஈழத்தமிழர் சுயாட்சிக் கழகத்தின் செயலாளர் நாயகம் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் தேசத்தின் பாரம்பரிய வரலாற்றுத் தாயகம் ஆக்கிரமிக்கப்பட்ட நிலையில் உள்ளது. எழுபத்தைந்து வருடங்களுக்கு மேலாக சிங்கள தேசம் ஒருதலைப்பட்சமாகத் தீர்மானித்து வந்துள்ள இலங்கை ஒற்றையாட்சி அரசு ஈழத்தமிழர் தேசத்தையும் அதன் தாயகத்தையும் ஆக்கிரமித்துள்ளது.

ஈழத்தமிழர்களின் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தாயகத்தின் பிரதேச வாரியான பிரதிநிதித்துவம் தவறாகப் பயன்படுத்தப்பட்டு எமது தேசிய இனத்தின் அரசியல் வேணவா மறுதலிக்கப்படுவதற்கும் மலினப்படுத்தப்படுவதற்கும் இந்தத் தேர்தல் அரசியல், ஓர் அரசியல் வெளியாகப் பயன்படுத்தப்படக்கூடாது. எமது மக்களில் பெரும்பான்மையினரின் ஜனநாயக ஆணை இல்லாதோர் எமது பிரதிநிதிகள் போல வலம்வந்து எமது தேசிய வேணவாவைத் திரிபுபடுத்தாமல் இருப்பதற்காகவும் எமது பிரதேச ரீதியான தேர்தல் அரசியலை நாம் ஓர் தடுப்பு உத்தியாகப் பயன்படுத்துகிறோமே அல்லாது, தேர்தல் அரசியலை மூலோபாய வழிவகையாக ஈழத்தமிழர்கள் பயன்படுத்தவில்லை. இந்தத் தேர்தல்களில் நாம் போட்டியிடுவதன் மூலம் இலங்கையின் ஒற்றையாட்சி முறையை நாம் அரசியல் தீர்வாக ஏற்றுக்கொள்வதாக எவரும் ஒருபோதும் பொருள்கோடல் செய்ய இயலாது.

ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை தேர்தல் அரசியல் என்பது இலங்கைத் தீவில் ஒரு மூலோபாய வழியாக அமையும் தகுதியை எப்போதோ இழந்துவிட்டது. அதை எந்த அளவில் உத்தியாகப் பயன்படுத்துவது என்பதில் மட்டுமே நாம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும் – என்றார். (ம-100)


## வேலையாட்கள் தேவை

- தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO)
  HND or NCT - Civil/Qs NVQ Level with preparing Bill
- கணிய அளவையியலாளர் (QS)
  HND or NCT-Civil/Qs NVQ Level with preparing Bill
- கணக்காளர் (Accountant)
- கணக்கு உதவியாளர் (Accountant Assistant)
- அலுவலக உதவியாளர் (Office Assistant)

தொடர்பு :- 077 210 0749
Mail :- shaganaconstruction@hotmail.com
(காலை 8.00 - மாலை 5.00 வரை) யாழ்ப்பாணம்.

(CS/721) J-1

## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs. 2500.00 - 3000.00 |
| மேசன் உதவியாளர் | - Rs. 2000.00 - 2500.00 |
| பெயின்ரர் | - Rs. 2500 |
| பெயின்ரர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| வெல்டர் உதவியாளர் | - Rs. 2000.00 |
| வயறிங் | - RS. 2500.00 - 3000.00 |
| பிளமிங் | - Rs. 2500.00 - 3000.00 |
| தச்சு வேலை (அனுபவமுள்ளவர்கள்) | - Rs. 2500.00 - 3000.00 |

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)

தோடர்பு:- 077 210 0749
(காலை 7.00 - மாலை 6.00 வரை) யாழ்ப்பாணம்

(CS/721) J-1

## வாடகைக்கு உண்டு

செங்குந்தா பாடசாலைக்கு அருகில் செங்குந்தா வீதியில் **வீடு வாடகைக்கு உண்டு.**

076 148 1075, 077 864 5502

(CS/55375) J-1

## வீடு விற்பனைக்கு

கொழும்பு. மொறட்டுவ பகுதியில் இருக்கும் சொய்சாபுர தொடர் அடுக்குமாடியில் C Block ல் இரண்டு அறையுடன் கூடிய **வீடு விற்பனைக்கு உள்ளது.** மாபிள் பதித்து முழு வீடும் திருத்தப்பட்டுள்ளது.

விலை - 15,000,000/=

தொடர்புகளுக்கு:-
+9476 230 6450
Email: mpact.uk@gmail.com

(CS/28601) J-1


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி
**லிசாந்தினி சதீஸ்குமார்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**துரைராஜா சிவானந்தன்**
அவர்கள் 12.06.2024 புதன்கிழமை இறைபதம் அடைந்தார். இவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

(CS/55372) J-1

## கண்ணீர் காணிக்கை



யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் **திருமதி ஆன் யூலியற் றதினி றொய்லன்ஸ்**
அவர்களின் பாசமிகு கணவர்
**பிலிப் றொய்லன்ஸ்**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரது ஆன்மா ஆண்டவரின் சந்நிதியில் நித்திய இளைப்பாறலடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/இளவாலை கன்னியர்மடம் மகா வித்தியாலயம்.

(CS 55385)V-1

## பெயர் மாற்றம்

சின்னச்செட்டிக்குளம் வவுனியாவை பிறப்பிடமாகவும், நாவாந்துறை தெற்கு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட **ஜெனீவா தனுஸ்பிரியா** ஆகிய நான் எனது பெயரை **ஜெனீவா தனுஸ்ரிகா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **ஜெனீவா தனுஸ்ரிகா** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

**ஜெனீவா தனுஸ்ரிகா**

(CS/55375) J-1


## வாடகைக்கு

"சின்னையா முருகேசு சிவபாலன்" கட்டடத் தொகுதியிலுள்ள கடைகள் **வாடகைக்கு உண்டு.**
A-9 வீதி. கரடிப்போக்கு. கிளிநொச்சி

T.P :-
S.Sivaharan 077 448 1433

(CS/55378) J-1


## மரண அறிவித்தல்



அன்னை மடியில் 29 . 12 . 1925

இறைவன் அடியில் 12 . 06 . 2024

### பாக்கியம் கனகரெட்ணம்

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பாக்கியம் கனகரெட்ணம் கடந்த 12.06.2024 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சம்பந்தர் - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சம்பந்தர் கனகரெட்ணம் (உரிமையாளர், குகன் ஸ்ரோர்ஸ், நல்லூர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான "கலாபூஷணம்" சுப்பிரமணியம் (ஆர்ட்டிஸ் மணியம்), நீலாவதி (மலேசியா), நேசரெட்ணம், நவரெட்ணராஜா மற்றும் சகுந்தலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பஞ்சரெட்ணம் (எஸ்.கே பஞ். இசை அமைப்பாளர் லண்டன்) மற்றும் சிவதாசன், குகதாசன் (பிரான்ஸ்), தயாளினி (பிரான்ஸ்), விஜயதாசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற விஜயராணி (லண்டன்) மற்றும் கலாறஞ்சினி (பிரான்ஸ்), இரவீந்திரன் (பிரான்ஸ்), ரஜனி (பிரான்ஸ்), ஆகியோரின் பாசமிகு மாமியாரும், வூட்றோ - மரிஎலன், சுவீனி, பிறீனி, வினோஜா, வினோஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அலிசியாவின் அன்புப் பூட்டியும், சற்குணவதி (மலேசியா), சுகுணவதி (மலேசியா), ஸ்கந்தராஜன் (மலேசியா), Dr.ஸ்கந்ததேவன் (மலேசியா), ஸ்கந்தபாலன் (நியூஸ்லாந்து), காலஞ்சென்ற ஸ்கந்தநாதன் (மலேசியா) மற்றும் யசிந்தா (யசிந்தா ஆட்ஸ் நல்லூர்), காலஞ்சென்ற ஜனத்குமார் (கனடா) மற்றும் அனுஷாந்தி (ஆசிரியர், யாழ் இந்து மகளிர் கல்லூரி), நிரோஷானந் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் கோப்பாய்) ஆகியோரின் அன்புப் பெரிய தாயாரும், Dr.சிவஞானமணி, சதீஸ்குமார் (கனடா), சசிகலா, சசிரேகா ஆகியோரின் அன்பு மாமியருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**

**628, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் முன்பக்கம்)**

**யே.நிரோஷ் (பேறாமகன்** - 077 808 4927)
**க.குகன் (மகன்** - 074 260 3823)
**இ.தயா (மகள்** - +33 641 401 943)
**க.விஜி (மகன்** - +33 619 692 380)

(CS/55371) J-1

## தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ -து)
## சொத்து விற்பனைக்கான கூறுவிலைகோரல்

எமது சங்கத்திற்கு சொந்தமான கீழ்க்குறிப்பிட்ட சொத்துக்கள் கூறு விலைகோரி விற்பனை செய்யப்படவுள்ளன. ஆர்வமுடைய விண்ணப்பதாரர்கள் அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி 2024.07.12 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடியவாறு "தலைவர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து), தெல்லிப்பழை எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

1. பாரவூர்தி (லொறி) - 42 - 6157
2. 4 பரப்பு மேட்டுக் காணி (கீரிமலை - கொல்லங்கலட்டி வீதியில் அமைந்துள்ளது. தச்சன்காடு அம்பனை வீதியில் மேற்கு எல்லையும், தெற்கு எல்லையில் 12' அகலப் பாதையும் உள்ளது)

**குறிப்பு:**

1. மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகையாக, பாரவூர்திக்கு ரூபா 500.00 வும், காணிக்கு ரூபா 1000.00 வும் தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
2. ஒவ்வொரு சொத்துக்கும் தனித்தனி விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **"சொத்து விற்பனை கூறுவிலை காணி அல்லது லொறி "** எனக் குறிப்பிடல் வேண்டும்.
3. தலைமைக் காரியாலயத்தில் பணம் செலுத்திப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவத்தில் மட்டுமே விண்ணப்பங்களினை சமர்ப்பிக்க முடியும்.
4. சொத்துக்களைப் பார்வையிட விரும்புவோர் அலுவலக நேரத்தில் வந்து பார்வையிடலாம்.
5. கிடைக்கப்பெற்ற கூறுவிலைகள் 2024.07.13 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும். இதில் விண்ணப்பதாரர்கள் கலந்துகொள்ள முடியும்.


**தொலைபேசி இலக்கம் : 021205 9250**

**தலைவர்,
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ - து).
தெல்லிப்பழை.**

2024.06.15

(CR/42651) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்மிகு அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான



# திருமஞ்ச பெருவிழா சிறப்பிதழ்



## இன்று (15.06.2024) சனிக்கிழமை

## ஆலய வரலாறு

சைவமும் தமிழும் தனைத்தோங்கும் யாழப்பாண நகரின் கிழக்குச் திசையில் அரியாலைக் கிராமத்தின் மேற்கு திசையில் வீற்றிருந்து அருள் சுரக்கும் அரியாலை வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் மிகத் தொண்மையான வரலாற்றைக் கொண்டது. யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்களின் இராசதானியாக விளங்கிய நல்லூரின் தென்புலத்தில் அன்று தொட்டு இன்றுவரை அருள்மழை பொழிந்து எம்மைத் காப்பாற்றி வருகின்றாள் அன்னை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள்.

இந்த ஆலயத்தின் வரலாறு பல நூற்றாண்டுக்கு முற்பட்டவையாகும். ஆரம்பத்தில் தர்மகர்த்தா சபையினர் ஆலயத்தை நிர்வகித்தவந்தனர் தற்போது பரிபாலான சபையினர் நிர்வகித்துவருகின்றனர். மூர்த்தி. தலம். தீர்த்த. விருட்சம் ஆகிய நான்கும் அமையப்பெற்ற எம் அம்பாளைத்தரிசிப்பதற்காக நாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வருகை தருகின்றனர். ஆலயப் புணத்தானம் செய்யப்பட்ட 2022 ஆம் ஆண்டு அடியவர்களின் உதவியுடனும் புலம்பெயர்வாழ் தேசத்து உறவுகளின் உதவியுடனும் இராஜகோபுரம் அமைக்கப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. பொதுச்சபையின் புதுப்பொலிவுடன் சிறப்புற்று விளங்கும் இவ்வாலைத்தில் தற்போது 10 திருவிழாக் களைக்கொண்ட மஹோற்சவ திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தீர்த்தத்திரு விழாவுடன் நிறைவுபெறும். கைலாசவாகனம். சப்பறம். தேர் என்பற்றுடன் புதிதாக அமையப்பெற்ற திருமஞ் சத்திலும் அம்பாள் உலாவந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கிருக் இருக்கின்றாள்.

## பிரதமகுருக்களின் ஆசியுரை



உலகத்தின் தோற்றத்திற்கும் ஒழுக்கத்திற்கும் காரணமாய் விளங்குவது சக்தி எறும்பு முதல் யானை ஈறான உயிரினங்களின் இயக்கத்துக்கு காரணம் சக்தி. பூமி முதலான கிராமங்கிள் இயங்கத்துக்கு ஈர்ப்பு சக்தி அவசியம். இப்படி எவ்வாறு நோக்கிலும் சகலவற்றுக்கும் காரணமாகிறாள் சக்தி. அந்த வகையில் அன்பர்களாகிய அடியவர்களின் துயர்துடைத்து பேரின்பத்தை அளித்துவரும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பளுக்கு மஹோற்சவ திருவிழா நடைபெற்று இன்று திருமஞ் சத்திலே உலாவர இருக்கிறாள்

"தேவஸ்தான மஹோற்சவ குரு
சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள்

## இஷ்ட சித்திகளை பெறுவீர்களாக



ஈழமணித்திருநாட்டின் ஈடில்லா சிரமேயென விளங்கும் யாழ்ப்பாணத்திலே சைவமும் தமிழும் வளர்ந்த நாவலர் பெருமாள் தோன்றிய நல்லூரை அடுத்தாற்போல் உள்ள அதரியாலையூரில் வெட்டுக்குளத்தில் வீற்றிருந்து அருள்சக்தியாக விளங்கும் வெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளக்கு மகோற்சவ திருவிழா நடைபெற்றுவருகிறது. அந்தவகையில் நாளையதினம் திருமஞ்சத்தில் அம்பாள் உலவாந்து அடியவர்களுக்கு அருள் பாலிக்கிறாள். இன்று நடைபெறும் திருமஞ்ச வெள்றோட்ட நிகழ்விலும் நாளை நடைபெறும் திருமஞ்ச திருவிழாவிலும் அம்பாளை தரிசிக்க வரும் அனைத்து அம்பாளின் அடியவர்களுக்கும் அருளாசி பெற்றிட ஆசிகள் கூறுகின்றேன்.

ஆலய அர்ச்சகர்
பிரம்ம ஸ்ரீ சண்முக மாதளசர்மா

## அம்பாளின் அதிசயம்

1912 ம் ஆண்டு யாழ்குடா நாடே அதிசயிக்கும் வகையில் ஆச்சரியமான சம்பவம் நடைபெற்றது. அன்று அந்நியரின் ஆட்சி நடைபெற்ற காலம் யாழ். குடாநாடு என்றுமே காணாத சோகச்சம்பவம் இடம்பெற்றது. யாழ். குடா நாட்டை வைசூரி எனும் அம்மை நோய் தாக்கியது. அரசினாலல் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு அம்மை நோய் கோரத்தாண்டவம் ஆடியது. கிராமம் கிராமமாக மக்கள் நோயில் மடிந்தனர் பல ஆயிரக் கணக்கானவர் நோயில் மடிந்ததாக ஆவணங்கள் கூறுகின்றன. நோய்தொற்று ஏற்பட்டவர்களை ஊர்காவற்றுறை கடற் கோட்டையில் தனிமைப்படுத்தி மேலும் நோய் பரவாமல் ஆட்சியாளர்கள் செய்தனர். கிராமம் கிராமமாக இந்நோயினால் மாண்டவர்கள் தவிர நோயில் இருந்து குணமாகியவர்கள் உடற் சிதைவுகளுடன் காலத்தைக் கழித்தனர். ஆனால் யாழ். குடாநாடே அதிசயிக்கும் வகையில் அரியாலை மேற்கு கிராமத்தில் மட்டும் ஒருவருக்கு கூட இந்நோய் ஏற்படவில்லை. இப் பேரழிவிலிருந்து எம் மக்களைக் காத்தவள் எமது அன்னை புவனேஸ்வரி தாயாகும்.

புதிதாக அமையப்பெற்ற
இத் திருமஞ்சத்தில் அம்பாள்
இரவு 8.00 மணியளவில்
வீதி உலாவருவாள்

திருமஞ்ச நிகழ்வைத்தொடர்ந்து
இரவு 9.00 மணக்கு பின்னர்
ஆலயத்தில் நடனம் மற்றும் பக்திபாடல்,
இசை நிகழ்வு என்பன நடைபெறும்.

## சிறப்புற வாழ்த்துவோர்

**புலம்பெயர்வாழ் இத்திமரத்தாள் புத்திரர்கள்**
**திருபணிச்சபை**




அடிக்கல் நாட்டும் அங்குரார்ப்பணம்




திருமஞ்ச உருவாக்கம் நடைபெறல்



திருமஞ்ச தரிப்பிட உருவாக்கம் நடைபெறல்



## புதிய திருமஞ்சம்




இத்திருமஞ்சமானது புலம்பெயர் வாழ் இத்திமரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச் சபையினரால் அன்னை புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்திற்கு உபயமளிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூலிப்படைக்கு இனி ஆள்சேர்ப்பு இல்லை

## ரஷ்யா இணக்கம்

கொழும்பு, ஜூன் 15

இலங்கையிலிருந்து ரஷ்ய இராணுவத்துக்கு இனிமேல் ஆள்சேர்ப்புச் செய்யமாட்டோம் என ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சர் அலி சப்ரி மற்றும் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவுக்கும் இடையே இரு தரப்பு பேச்சு நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் சுற்றுலா, உயர்கல்வி மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உள்ளிட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது இலங்கை இராணுவத்தினர் ரஷ்ய ஆயுதப் படைகளில் இணைவது தொடர்பில் விரிவாக பரிசீலனை செய்யப்பட்டு நிலைமையைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார். (ச-இ)




அராலி வடக்கு நாகேந்திரமடம் புளியடி ஸ்ரீ ஞான பைரவர் ஆலய ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக நிகழ்வு கடந்த புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது..

(ஒ-25-27)

# மடிக்கணினி வழங்கல்



யாழ்ப்பாணம், ஜூன் 15

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் ஐயாத்துரை நடேசனின் இருபதாவது ஆண்டு நினைவை முன்னிட்டு, ஐ.நடேசன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில், யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறை மாணவன் சு. சுஜேந்திரனுக்கு புலமைப்பரி சிலும் மடிக்கணினி யும் கடந்த புதன்கிழமை வழங்கிவைக்கப்பட்டன. யாழ். பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் சிவ சுப்பிரமணியம் ரகுராம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக ஐ.நடேசன் அறக்கட்டளையின் உறுப்பினர்களில் ஒருவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளருமான கனகரட்ணம் சுகாஷ் கலந்துகொண்டார்.

(ஒ-25-100)

# பொதுவேட்பாளர் விவகாரம்: தமிழரசு தீர்மானிக்கவில்லை

## மாவை இவ்வாறு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் குறித்து இலங்கை தமிழரசுக் கட்சி இன்னும் தீர்மானம் எதனையும் மேற்கொள்ளவில்லை என மாவை சோ.சேனாதிராஜா தெரிவித்தார்.

தெற்கின் பிரதான கட்சிகளின் தேர்தல் அறிக்கையைப் பார்வையிட்ட பின்னரே இதுதொடர்பில் இறுதிமுடிவெடுக்கப்படும். சிலர் தமது தனிப்பட்ட கருத்துகளை வெளியிட்டாலும் அது எமது கட்சியின் உத்தியோகபூர்வ முடிவில்லை எனவும் மாவை மேலும் தெரிவித்தார்.

(ம-66)

# வலுப்படுத்தப்படுகின்றது பாலியல் தடுப்புச்சட்டம்

கொழும்பு, ஜூன் 15

பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்கொடுமை

களைத் தடுப்பதற்கான சட்டவிதிகளை வலுப்படுத்தி தண்டனைச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான சட்ட வரைவுக்கு சட்டமா அதிபர் சான்றளித்துள்ளார்.

பொது இடங்களில் பாலியல் துன்புறுத்தல் மற்றும் பாலியல் வன்கொடுமைகள் உட்பட அனைத்து வகையான பாலியல் துன்புறுத்தல்களை குற்றமாக மாற்றி குற்றவியல் தண்டனைச் சட்டத்தில் திருத்தங்களை அறிமுகப்படுத்த 2022 ஆண்டு அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதியளிக்கப்பட்டது.

இந்தச் சட்டவரைவை அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் பின்னர் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)


# கேள்விஅறிவித்தல்

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு PSDG/சபைநிதி 2024

1. கரைதுறைப்பற்று பிரதேசசபையானது, PSDG/சபை நிதியினை கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
2. **தலைவர், பெறுகைக்குழு, கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு, வடமாகாணம்,** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி, கட்டுமானம் மற்றும் கட்டட நிர்மாண துறையில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. தொலைபேசி:- 024-3243542 தொலைநகல்: 0212290001** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் 18.06.2024ம் திகதியிலிருந்து 04.07.2024 வரை காலை 09.00 மணிமுதல் மாலை 02.30 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் இடத்திலிருந்து 18.06.2024ம் திகதியிலிருந்து 04.07.2024 வரை வேலை நாட்களில் **காலை 09.00** மணிக்கும் **மாலை 02.30** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
8. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு** எனும் முகவரிக்கு 05.07.2024ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரரின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63 நாட்கள் வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) (VAT நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு(Rs) | செல்லுபடியாகும் காலம் |
| 1 | TOURISM/PSDG/NP/MU/MPPS/2024/01 | Improvement and Development Mullaitivu Beach Tourist Facilities | 4.237 | 63 நாட்கள் | C8 & C7 கட்டடங்கள் | 84,000.00 | Oct, 04.2024 |
| 2 | TOURISM/PSDG/NP/MU/MPPS/2024/02 | Construction of Rest Hall with open Kitchen and Huts at Mulliwaikkal Tourism Centre | 3.813 | 63 நாட்கள் | C8 & C7 கட்டடங்கள் | 77,000.00 | Oct, 04.2024 |
| 3 | TOURISM/CF/NP/MU/MPPS/2024/03 | Improvement of Mullaitivu Beach Tourism Development. | 2.542 | 63 நாட்கள் | C8 & C7 கட்டடங்கள் | 51,000.00 | Oct, 04.2024 |

11. கேள்விகோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 28.06.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு.**
**15.06.2024**

(CR/42654) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதியர் பயிற்சிக் கல்லூரிக்கு புதிய அதிபர் நியமனம்



யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரியின் புதிய அதிபராக எஸ்.ஜெயக்குமார் சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் கடந்த திங்கட்கிழமை அவர் தனது கடமைகளை உத்தியோக பூர்வமாகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

29 வருடங்களாக தாதியர் சேவை மற்றும் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பல்வேறு படிநிலைகளில் ஜெயக்குமார் கடமை புரிந்து வந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(ஒ-66-555)

## வீதித்தடை

நல்லூர் சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கூடல் அமைப்பின் அடையாள வளைவு அமைத்தல் கட்டுமானப் பணியின் பொருட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரையான இருவார காலத்துக்கு கைலாசபிள்ளையார் ஆலயத்துக்கு அண்மித்த பகுதியிலான வீதி மூடப்படவுள்ளது. பாதசாரிகள் இந்தக்காலப்பகுதியில் மாற்றுப் பாதையை பயன்படுத்துமாறு யாழ். மாநகரசபை கேட்டுக்கொண்டுள்ளது. (ச)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

சாவகச்சேரி அல்லாரை அறுகம்புல் மகாகணபதி ஆலய பெருந்திருவிழா கடந்த புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

கிரியைகள் சிவப்பிரம்மஸ்ரீ ஸ்ரீகாந்த் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளன. (ச-9)

# மரண அறிவித்தல்

தோற்றம் 16.10.1938



மறைவு 09.06.2024

## திருமதி இராசா நேசமலர்

யாழ். அச்சுவேலி தம்பாலை சபாலேனைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட இராசா நேசமலர் அவர்கள் (09.06.2024) கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சபாபதி-கற்பகம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சீனியர்-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசா அவர்களின் அன்பு மனைவியும், சக்திவேல் (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு தாயாரும், சுகிர்தா (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு மாமியாரும், தாருஷன் (பிரான்ஸ்), இந்துஷா (பிரான்ஸ்), இனிஷா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், காலஞ்சென்றவர்களான இராசம்மா (மலேசியா), செல்லம்மா (இலங்கை) மற்றும் பவளம் (பிரான்ஸ்), மங்களம் (இலங்கை), காலஞ்சென்ற குணரத்தினம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து (மலேசியா), நாகமணி, சின்னையா, ஆறுமுகம் (தம்பாலை), அருந்தவம் மற்றும் சோமாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், நடராசா அவர்களின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் (15.06.2024) சனிக்கிழமை இன்று அவரது இல்லத்தில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து (16.06.2024) ஞாயிற்றுக்கிழமை நாளை மு.ப 08.00 மணியளவில் இறுதிக்கிரியை நடைபெற்று மு.ப 10.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக தம்பாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
சக்திவேல் (மகன்-பிரான்ஸ்) : + 33 63 430 2827
சிவராசா (லண்டன்) : 94 77 544 3038

(CS 747) V-1

# மரண அறிவித்தல்

## குமாரவேலு தெட்சணாமூர்த்தி



சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும், நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரவேலு தெட்சணாமூர்த்தி நேற்றுமுன்தினம் (13.06.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரவேலு - தங்கம் தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - மாரிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற மங்கையற்கரசி அவர்களின் அன்புத் துணைவரும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், ஞானதேவன் மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சந்திரகாந்தா, குணசாந்தி (சுவீடன்), சித்திராதேவி, தயாபரன் (சுவிஸ்), ஸ்ரீகலா, யோகேஸ்வரன், ஜெகதீஸ்வரன் (சுவீடன்), ஜெகதீஸ்வரி (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், இராசேந்திரம், தவராசா (சுவீடன்), காலஞ்சென்றவர்களான புவனதாஸ், ராஜ்பிரியா (சுவிஸ்), சற்குணராசா, சுதர்சினி, தவமலர் (சுவீடன்), கபாலீஸ்வரன் (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெயாளினி, ஜெயகாந்தன், ஜெயரூபன் (குவைத்), ஜெயாளன், ஜெனிதா, ஜெயரூபி, கிருசாயினி (சுவீடன்), சஞ்சிகா, பிரசாத், யோகசாந் (சுவிஸ்), விதுஷா (சுவிஸ்), வர்ணிசா (சுவிஸ்), சதீஸ், தட்சாயினி, விதுஷன், கேசிகா, சுலக்சிகா (சுவீடன்), சுலக்சன் (சுவீடன்), ஜெனுசா (சுவீடன்), ஜெனுசன் (சுவீடன்), ஜெனிதா (சுவீடன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், நிரூபன், நிரூஜா, சஜானி, சேதுசன், கென்சிகன், சபிஸ்னு, பிரியங்கா, தர்சாலினி, கியாரா, கோபிகன், பவிசன், எழில், டினுசன், டியாறா, றியாஷ், கிரிஸ் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2024) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆரியம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிறப்பு 25.04.1940

இறப்பு 13.06.2024

தகவல்: குடும்பத்தினர்
077 408 0094

(CS/55386) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் பெரமுன களமிறங்கும்

### உதயங்க திட்டவட்டம்

கொழும்பு, ஜூன் 15

**ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி நிச்சயம் போட்டியிடும். மொட்டுச் சின்னத்தில் எவ்வித மாற்றமும் வராது - இவ்வாறு ராஜபக்ச குடும்ப உறுப்பினரும், ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்கள் பட்டியலில் மொட்டுச் சின்னம் நிச்சயம் இருக்கும். வேட்பாளர் ஒருவரைக் களமிறக்க மொட்டுக் கட்சி முடிவெடுத்துவிட்டது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்படும்வரை வேட்பாளரை பெயரிடாமல் இருக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது.

தம்மிக்க பெரேரா, நாமல் ராஜபக்ச ஆகியோர் தொடர்பில் கட்சிக்குள் கருத்தாடல் இடம்பெற்றுவருகின்றது. தான் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் என்பதை ரணில் அறிவித்துவிட்டார். அவர் மொட்டுச் சின்னத்தை விரும்பவில்லை.

எனவே, மொட்டுக் கட்சி வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் என்பது உறுதி - என்றார். (எ-44)

### சிறுவர் இல்லச் சிறுமியை

## துர்நடத்தையில் ஈடுபடுத்திய பொறுப்பதிகாரி கைதானார்

களுத்துறை, ஜூன் 15

சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்ட சிறுமியை பாலியல் துர்நடத்தையில் ஈடுபடுத்திய குற்றச்சாட்டில் சிறுவர் இல்லப் பொறுப்பாளர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

சூரியகமவைச் சேர்ந்த 17 வயதுச்சிறுமி ஒருவர் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் கம்பொலையிலுள்ள சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சிறுவர் இல்லப் பொறுப்பாளர் இந்தச் சிறுமியை இளைஞர் குழுவொன்றுடன் பாலியல் துர்நடவடிக்கைகளில் ஈடுபடுத்தியுள்ளார். சிறுமியின் உறவினர் ஒருவர் அளித்த முறைப்பாட்டின் பிரகாரம் சிறுவர் இல்லப் பொறுப்பாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெல்மதுவ பொலிஸார் இந்தக் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும், சிறுமி தம்புள்ளை மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்றும் மத்துகம பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாலிய காந்தாரவத்த தெரிவித்துள்ளார். (ஒ-25-6)



வவுனியா, ஓமந்தை மருதோடைக் கிராமத்திலுள்ள மருதோடை கந்தசாமி கோவில் மஹா கும்பாபிஷேகம், கடந்த ஞாயிற்றுக் கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ப-131)

## பேருந்துச் சேவை வழங்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 15

முழங்காவில் பிரதேசத்தின் புதிய வழித்தடத்தில் பேருந்துச் சேவைகள் நடத்தப்படவேண்டும் என அந்தப் பகுதியிலுள்ள பல கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முழங்காவில் உப நகரத்தில் இருந்து இரணைமாதா நகர், நாச்சிக்குடா, செபஸ்ரியார்புரம், கரடிக்குன்று, ஜேம்ஸ்புரம் ஆகிய வழித் தடத்திலேயே புதிய பேருந்து சேவைகள் இடம்பெறவேண்டும் என மேற்படி கிராமங்களின் மக்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

ஆனால், இதுவரை நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. முழங்காவில் பேருந்து நிலையத்தில் நீண்டநேரம் தரித்து நிற்கும் பேருந்துகள் குறுகிய பேருந்து சேவையாக நடத்துவதன் மூலம் மேற்படி கிராமங்களைச் சேர்ந்த குடும்பங்கள் பெரும் பயனடைவார்கள் எனவும் முழங்காவில் மகா வித்தியாலயம், இரணைதீவு பாடசாலை, நாச்சிக்குடா பாடசாலை போன்ற பாடசாலைகளுக்கு வருகை தரும் மாணவர்களும், முழங்காவில் ஆதார மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளர்களும் இலகுவாக வந்து செல்லமுடியும் என்றும் அந்தப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டினர். (ப-13)

## அநுரவை ஒளிப்படம் எடுத்த புலனாய்வாளர் மீது தாக்குதல்

குருநாகல், ஜூன் 15

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க கலந்துகொண்ட அரசியல் கூட்டத்தில், ஒளிப்படம் எடுத்த பொலிஸ் புலனாய்வாளர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் குருநாகலில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் மேடைக்கு அருகே நின்று ஒளிப்படமெடுத்தவரிடம் அநுரகுமாரவின் பாதுகாப்பாளர்கள், சந்தேகத்தின் பேரில் விசாரணை நடத்தியுள்ளனர். அப்போது அவர் தனது அடையாளத்தை உறுதிப்படுத்தவில்லை. இதனால் அநுரவின் ஆதரவாளர்கள் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். தாக்குதலையடுத்து ஒளிப்படம் எடுத்த பொலிஸ் புலனாய்வாளர் வேகமாக ஓடி, ஜீப்பில் ஏறி தப்பிச்சென்றுள்ளார். (ஒ-25-6)

## உகந்தை காட்டுப் பாதையை திறப்பதற்குத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 15

வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காமக்கந்தன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா எதிர்வரும் ஜூலை மாதம் 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 22 ஆம் திகதி மாணிக்ககங்கையில் நீர்வெட்டு உற்சவத்துடன் நிறைவுபெறும். இதனை முன்னிட்டுக் கதிர்காமக் கந்தன் ஆலயம் செல்லும் பாதயாத்திரிகளுக்காக, உகந்தை காட்டுப் பாதையை எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திறப்பதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பான கூட்டம் உகந்தை முருகன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது மேற்படி தீர்மானம் எட்டப்பட்டது. (ஒ-25-66)



## சூழல்தின நிகழ்வு

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தினரால் உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, 'பசுமை அறிவொளி' நிகழ்ச்சி தெல்லிப்பழை மாவை கலட்டி பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்டது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், மாவை கலட்டி காந்திஜி, சனசமூக நிலையத்தின் தலைவர் பா.நவநேசன், ஆசிரியர் ப.பிரிந்தன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-25-27)

சுற்றுச்சூழல் தினத்தையொட்டி ஊரெழு கணேச வித்தியாசாலையில் மரக்கன்றுகள் அண்மையில் நடப்பட்டன. (ச)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ப்பணிப்புடன் ஆட்சி செய்யுங்கள்

*இலங்கைத் தலைவர்களை வலியுறுத்துகிறார் ஜூலி சங்*



கொழும்பு, ஜூன் 15

இலங்கைத் தலைவர்கள் அர்ப்பணிப்புடனும், வெளிப்படைத்தன்மையுடனும், பொறுப்புக்கூறலுடனும் ஆட்சிசெய்ய வேண்டும் என்று அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார். சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட நிதி விடுவிப்பு தொடர்பாக அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

## அனுமதியின்றி வர்த்தகம்; வர்த்தகருக்குத் தண்டம்!

யாழ்ப்பாணம், ஜூன் 15

முறையான அனுமதியின்றி உணவுப் பொருள்களை இறக்குமதிசெய்து விற்பனை செய்த குற்றச்சாட்டில் வர்த்தகர் ஒருவருக்கு 12 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டிலிருந்து முறையான இறக்குமதி அனுமதியின்றி உணவுப் பொருள்களை இறக்குமதி செய்து யாழில் அமைந்துள்ள பல்பொருள் அங்காடிகளுக்கு விற்பனை செய்துவந்த நபருக்கு எதிராக, மானிப்பாய் பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், அவருக்கு 12 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது. (ம-66)

## குளவிக்கூடு அழிப்பு

கிளிநொச்சி, ஜூன் 15

தருமபுரம் மத்திய கல்லூரியில், மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் இருந்த குளவிக்கூடு கிளிநொச்சி வன உயிரிகள் திணைக்களத்தால் எரித்தழிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, தருமபுரம் மத்திய கல்லூரியில் இருந்த குளவிக்கூடு நேற்றுமுன்தினம் கலைந்ததில், 35 மாணவர்களும் 4 ஆசிரியர்களும் குளவிக்கொட்டுக்கு இலக்காகினர்.

இவ்வாறு மாணவர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் வகையில் இருந்த குளவிக்கூடே நேற்றுமுன்தினம் இரவு எரித்து அழிக்கப்பட்டுள்ளது. (அ-ம-27)

## சுழிபுரத்தில் கசிப்பு மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 15

சுழிபுரம் பாண்டவெட்டையில் 750 மில்லிலீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவர் வட்டுக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிறப்புக் கண்காணிப்பு நடவடிக்கையின்போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடம் இருந்து கசிப்பு மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-ம-125)

### தெற்குக்...

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும்நிலையில், சிறுபான்மை மக்களின் வாக்குகளுக்காக வடமாகாணத்தை நோக்கி பிரதான கட்சிகளின் பிரதிநிதிகளும் முக்கியஸ்தர்களும் வந்தவண்ணம் உள்ளனர். இந்த வாரத்தில் இந்த அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளும் வடக்குக்கு வருகை தந்துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான சஜித், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுர இருவரும் கடந்த இரு தினங்களுக்கு முன்னர் வடக்குக்குப் பயணம் மேற்கொண்டிருந்தனர். அவர்கள் தற்போது கொழும்புக்குத் திரும்பியுள்ள போதிலும் கட்சிகளின் இரண்டாம்நிலை பிரதானிகள் தொடர்ந்தும் வடக்கில் முகாமிட்டு பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடிவருகின்றனர்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு வந்து சென்றிருந்த நிலையில், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அவர் மன்னாருக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துகொள்வதற்காகவே ஜனாதிபதி ரணில் அங்கு செல்லவுள்ளார். இதன்போது அவர் உறுமய காணிப்பத்திரங்கள் வழங்கும் நிகழ்விலும் பங்கெடுக்கவுள்ளார்.

அத்துடன், பெரமுனவின் முக்கியஸ்தர்களில் ஒருவரும் தேசிய அமைப்பாளருமான நாமல் ராஜபக்சவும் விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார் என்றும் தெரியவருகின்றது. ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் நிலையில், சிறுபான்மை மக்களின் வாக்குகளை இலக்குவைத்தே தென்னிலங்கைத் தேசியக் கட்சிகள் வடக்குக்கு படையெடுப்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### வடக்கு...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலின்போது, பொதுஜன பெரமுனவின் ஆதரவு ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிட்டும். ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகவே ரணில் விக்கிரமசிங்க வருவார். எனவே, யானைச் சின்னம் மாறக்கூடும். 30 இலட்சம் வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சியின் வசம் உள்ளன. அந்த எண்ணிக்கையில் இருந்துதான் வாக்குவேட்டை ஆரம்பமாகும். பொதுஜன பெரமுன கட்சிக்குரிய 69 இலட்சம் வாக்குகளில் 39 இலட்சம் கிடைத்தாலேயே ரணிலின் வெற்றி உறுதியாகிவிடும் - என்றார். (அ-ம-44)

### 'ஸ்மார்ட்'...

பெற்றுள்ளது.

ஆசியாவில் 'ஸ்மார்ட்' நகரங்களை உருவாக்கும் உலக சுகாதார ஸ்தாபனத்தால், இலங்கையில் இதுவரையில் 17 ஸ்மார்ட் நகரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சியாகவே யாழ்ப்பாணத்தையும் 'ஸ்மார்ட்' நகரமாக்கும் வகையில் இந்தக் கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்ட போதிலும், கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக திட்டம் கைவிடப்பட்டது. இந்த நிலையில், தற்போது மீண்டும் 'ஸ்மார்ட்' யாழ்ப்பாணம் தொடர்பான பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

'ஸ்மார்ட்' யாழ்ப்பாணம் தொடர்பான பூர்வாங்கப் பரிசீலனைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. கழிவு முகாமைத்துவம், சுத்தமான குடிதண்ணீர், நகரின் தூய்மை, ஆரோக்கியமான உணவு, ஆரோக்கிய வாழ்வைக் கட்டியெழுப்பக்கூடிய சூழல் கட்டமைப்பு அடங்கலாக ஒன்பது பிரிவுகளின் கீழ் இந்தப் பரிசீலனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26)

### யாழில்...

அவற்றில் யாழ்ப்பாணமும் ஒன்றாகவே உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பு, கம்பஹா, களுத்துறை, யாழ்ப்பாணம், காலி, கண்டி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் டெங்குத் தொற்று பேராபத்தான நிலையில் உள்ளது என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. நாட்டில், இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 26 ஆயிரத்து 84 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 9 டெங்கு இறப்புகளும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

### சடலம்...

மொன்று கரையொதுங்கியுள்ளது.

நேற்று மாலை இந்தச் சடலம் கரையொதுங்கியதுடன் [illegible] பொலிஸார் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26,125)

### பல்கலைப்...

தீவிரப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளனர். ஊதிய உயர்வை நடைமுறைப்படுத்துமாறும், இதர கொடுப்பனவுகளை வழங்குமாறும் வலியுறுத்தி பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தொடர் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும், இந்த வருடத்தில் கொடுப்பனவுகள் மற்றும் ஊதிய உயர்வுக்குச் சாத்தியம் இல்லை என்று ஜனாதிபதி ரணில் அறிவித்துள்ளார். இதையடுத்து, எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் கல்விசாராப் பணியாளர்களை பணிக்குத் திரும்புமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் அறிவுறுத்தியுள்ளார். இந்தநிலையிலேயே, போராட்டத்தைக் கைவிடும் எண்ணம் இல்லை என்றும், அடுத்தடுத்த தினங்கள் தலைநகர் கொழும்பிலும் நாட்டின் இதர பகுதிகளிலும் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் என்றும் பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 2ஆம் திகதிமுதல் இடம்பெற்றுவரும் இந்தப் போராட்டம் காரணமாக, நாட்டில் உள்ள 17 பல்கலைக்கழகங்களிலும் கல்விச் செயற்பாடுகள் மிகையாகப் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### 40 இலட்சம்...

ஓமந்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டதுடன், ஆடுகளும் மாடுகளும் மீட்கப்பட்டுள்ளன. அவற்றைக் கடத்தினர் என்ற சந்தேகத்தில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்கு எதிராக பொலிஸ் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-18)

### ஒரு...

றும் அதனை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கான ஆவணங்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிளிநொச்சி இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போதே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது. கைதானவர்கள் அனைவரும் முல்லைத்தீவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம- 113-214)

### இலங்கை...

நாயக்க விமானத்தளத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன. இலங்கை வான்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச, அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் உள்ளிட்ட பலரும் இந்த ஆயுதக் கையளிப்பில் கலந்துகொண்டுள்ளனர். (அ-ம-6)

### போதையற்ற...

மாதம் 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட 'யுக்திய' நடவடிக்கை நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டம் கைவிடப்படமாட்டாது. இந்த வருடத்தின் இறுதிக்குள் நாட்டில் இருந்து போதைப்பொருள் மற்றும் பாதாள குழுக்கள் முற்றாக ஒழிக்கப்படும்.

'யுக்திய' சுற்றிவளைப்புகள் மூலம் இதுவரையில் நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் ஒரு இலட்சத்து 38 ஆயிரத்து 116 பேரும், 91 பட்டியலிடப்பட்ட குற்றக் கும்பலைச் சேர்ந்த 703 குற்றவாளிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் - என்றார். (அ-ச-இ)

**விற்பனைக்கு**

கோண்டாவில் டிப்போவிற்கு அருகாமையில் 1 3/4 பரப்பில் அமைந்த வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு

தொடர்புகளுக்கு:

**077 358 3879**

(CS 745) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாகிஸ்தான் வெளியே!**

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் நேற்று இரவு நடைபெறவிருந்த அமெரிக்கா மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் மழை காரணமாகக் கைவிடப்பட்டது. இதனால், தொடரில் இருந்து பாகிஸ்தான் வெளியேற்றப்பட்டதுடன், அமெரிக்கா சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது. (ம)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரதான வங்கிகள் மற்றும் அலுவலகங்களுக்கு ஆண்/பெண் துப்புரவுத் தொழிலாளர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட உள்ளனர். கவர்ச்சிகரமான மாத சம்பளம், வருடாந்த போனஸ், EPF/ETF மற்றும் காப்புறுதி போன்ற சலுகைகள் வழங்கப்படும். தொடர்புகளுக்கு

**077 742 5053, 077 712 2281, 077 777 5067**

(CS/55369) J-1

## வாகன சாரதி தேவை

350 ரக கன்ரர் வாகனம் ஓட்டுவதற்கு AD License உள்ள வாகன சாரதி தேவை.
**யாழ்ப்பாணம்**

தொடர்பு: **076 821 9414**

## வங்கி மீதி வசதி (SHOW MONEY)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:

**074 173 7684**

## கமக்காரர்களுக்கு



சீனாவில் (China) இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 4 ஸ்ரோக் (4 STROKE) பவர் ஸ்பிறேயர் (POWER SPRAYER) 20 லீற்றர் கொள்ளளவு இப்பொழுது எம்மிடம்.
மெல்லிய சத்தத்துடன் நிம்மதியாக நீங்கள் வேலை செய்ய. அத்துடன் இலங்கையில் முதன்முறையாக அறிமுகப்படுத்துகின்றோம்.
"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க் . என் . கம்பனி**

150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

## விற்பனைப் பிரதிநிதி தேவை

கோண்டாவிலை மையமாகக் கொண்டியங்கும் மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையத்திற்கு வணிகநிலையங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளுக்கு சென்று விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய திறமையுள்ள விற்பனைப் பிரதிநிதி தேவை.

(CS/740) J-1

தொடர்பு:- **076 200 1700**

## கல்வி

**A/L இணைந்த கணிதம்**
**24,25,26 பிரிவுகள்**
தனிப்பட்ட, குழுவாக கற்பிக்கப்படும்
(தமிழ், ஆங்கில மொழிமூலம்)
க.மோகனறஞ்சன் B.Sc, (PGDE)

**077 839 3377**

## கல்லு அடிக்கும் மெசின் விற்பனைக்குண்டு

ஆறுமாத காலம் மட்டும் பயன்படுத்திய மிகவும் நல்ல நிலையில் உள்ள கல்லு அடிக்கும் மெசின் மூன்று விற்பனைக்கு உண்டு.

ஒன்றின் விலை - 90,000/=

தொடர்பு : **077 940 0963**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்தி அருகாமையில்**
**A-9 வீதி முகப்புடன் 14 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- இருபதடிப்பாதை (20).
- கைதடிச் சந்தி 100M தூரம்.
- சித்த வைத்தியசாலை முன்பாக.
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை.
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா. 2000000/= (இருபது இலட்சம் ரூபாய்)

**Golden Real Estate (Pvt) Ltd.**

(CS/55388) J-1

**077-029 4164**
**077-329 4130**
**077-294 1521**

## காணிகள் விற்பனைக்குண்டு

- தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் பிரதான காப்பெற் டச்சு வீதியில் இருந்து 300m தூரம்.
- தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 2 3/4 பரப்பு காணி விற்பனைக் குண்டு. பிரதான காப்பெற் டச்சு வீதியில் இருந்து இரண்டாவது காணி.
- இவ்விரண்டு காணிகளும் வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதிகள்
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை 12 லட்சம்

**தரகர் தேவையில்லை**

**பார்வையிடும் நேரம்:**
காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(CS 55384) J-1

**தொடர்புகளுக்கு:**

ஜெயம் { **077 986 5457** / **077 241 7589** }

## மரண அறிவித்தல்



தோற்றம்: 22 . 11 . 1934
மறைவு: 12 . 06 . 2024

**நவரத்தினம் கனகம்மா**

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கு மற்றும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கனகம்மா கடந்த 12.06.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - மீனாட்சி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - கற்பகம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற முருகேசு நவரத்தினத்தின் பாசமிகு மனைவியும், அற்புதராசாவின் பாசமிகு தாயாரும், கலாநிதியின் பாசமிகு மாமியும், ரஜீவன், துஸ்யந்தி, ரசிகரன், சாம்பவி, ரஜிந்தன், திவாஜினி, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அதியன், ஆராதன், றியா ஆகியோரின் பாசமிகு பூட்டியும், காலஞ்சென்றவர்களான இராசையா, செல்லையா, நல்லம்மா, சிவபாக்கியம், அன்னப்பிள்ளை, சுப்பிரமணியம், சிவலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் (வன்னியசிங்கம் வீதி, இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கு) நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வன்னியசிங்கம் வீதி,
இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
நவரத்தினம் அற்புதராசா
077 500 4897
077 958 7172

(CS/55368) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org